**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பாலக்கோடு.**

**முன்னிலை : திரு.G.அஜய் விக்ரிஷ் குமார்,B.B.A.,LLB., (Hons)**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், பாலக்கோடு.**

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06–ஆம் நாள் சனிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்(CC).139/2024**

(CNR No.TNDP05-002910-2024)

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
பஞ்சப்பள்ளி காவல் நிலையம்,
குற்ற எண்.94/2022. ... குற்றமுறையிடுபவர்

**/இடையே/**

அண்ணாதுரை (வயது 42/2023)
த/பெ. அரசாசெட்டி,
கங்காபாளையம் கிராமம்,
பஞ்சப்பள்ளி அஞ்சல்,
பாலக்கோடு தாலுக்கா. ..... எதிரி

இவ்வழக்கு 29.10.2024 – அன்று இந்நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.139/2024ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, கடந்த 02.06.2026 –ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.S.செந்தில்,B.A.,B.L., மற்றும் திரு.A.சிவா,B.A.,B.L.,DCS., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.


AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.06 18:35:33 +0530

## தீர்ப்புரை

<table>
<tr><td></td><td>S.No of the case</td><td colspan="3">C.C No.139/2024</td></tr>
<tr><td>a.</td><td>The Date of commission of the offence</td><td colspan="3">26.11.2022</td></tr>
<tr><td>b.</td><td>Date of filing of FIR</td><td colspan="3">27.11.2022</td></tr>
<tr><td rowspan="2">c.</td><td rowspan="2">Details on date of arrest of Accused and date of bail</td><td>Arrest of Accused</td><td colspan="2">Accused were released on Bail</td></tr>
<tr><td>---</td><td colspan="2">---</td></tr>
<tr><td>d.</td><td>The date of filing of the final report in the Court</td><td colspan="3">29.10.2024</td></tr>
<tr><td>e.</td><td>The date of questioning of the accused U/s 251 of Cr.P.C.</td><td colspan="3">03.06.2025</td></tr>
<tr><td>f.</td><td>Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts; except routine petitions like petitions under section 317 of the Code.</td><td colspan="3">NIL</td></tr>
<tr><td rowspan="3">g.</td><td rowspan="3">Date of examination in – chief and cross examination of a witness.</td><td>Prosecution side witnesses</td><td>Chief examination</td><td>Cross examination</td></tr>
<tr><td>PW1</td><td>25.09.2025</td><td>25.09.2025, 02.03.2026</td></tr>
<tr><td>PW2</td><td>25.09.2025</td><td>25.09.2025, 02.03.2026</td></tr>
</table>

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.06 18:06:38 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW3 | 02.03.2026 | 02.03.2026 |
| | | PW4 | 18.05.2026 | 18.05.2026 |
| | | PW5 | 22.05.2026 | 22.05.2026 |
| h. | Date of examination in – chief and cross examination of a witness. | **Nil** | | |
| i. | Date of examination of the accused and Under Section 313 of the Code. | 02.06.2026 | | |
| j. | Details of abscondence of an accused and his appearance / production, as the case may be; | **Date of issue of warrant** | **Date of withdrawal of warrant** | |
| | | -- | -- | |
| k. | Date adjourned for judgment of the case | 02.06.2026 | | |
| l. | The Date of the Order | 06.06.2026 | | |

இவ்வழக்கானது பஞ்சப்பள்ளி, காவல் உதவி ஆய்வாளரால் எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 294(b), 323, 324, –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**<u>2. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு–</u>**

கடந்த 26.11.2022–ம் தேதி மாலை சுமார் 04.45 மணிக்கு பஞ்சப்பள்ளி, கங்கபாளையம் மாதன் வீட்டின் முன்பு சாட்சி முருகேசன் என்பவருக்கும், எதிரி அண்ணாதுரைக்கும் ஏற்கனவே வாய்தகராறு ஏற்பட்டு பணம் கொடுக்கல்


AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.06 18:35:43 +0530

வாங்கலில் முன்விரோதம் இருந்து வந்த நிலையில், நாகராஜ் மகன் மணி (எ) மணிகண்டன் கங்கபாளையத்திலிருந்து அவரது இரு சக்கர வாகனத்தில் பாளையம் நோக்கி மாதன் வீட்டின் அருகே சென்றபோது நாய் குறுக்கே வந்ததால் திடீரென பிரேக் போட்டு கீழே விழுந்தவரை புகார்தாரர் முருகேசனின் மகன் சாட்சி 2 அருள் முருகன் ஓடி சென்று தூக்கி பார்த்து முதல் உதவி செய்து அவரது இருசக்கர வாகனத்தில் உட்கார வைத்து போகும் போது ஆரன் அடித்தபோது அருகில் இருந்த எதிரி அரசாசெட்டி மகன் அண்ணாதுரை என்பவர் சாட்சி 2 அருள்முருகனிடம் ஏண்டா என்னை பார்த்து ஆரன் அடிக்கிற என சொல்லி தேவிடியா பையா என் மயிறை புடுங்கிடுவியா என கெட்ட வார்த்தையால் திட்டியும், சாட்சி 1 முருகேசன் சாட்சி 2 அருள்முருகனை தூக்கி விளக்கிய போது எதிரி அண்ணாதுரை முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு முருகேசனை பார்த்து டேய் தேவிடியா மகனே என கெட்ட வார்த்தையால் திட்டியும், சாட்சி 2 அருள்முருகனை எதிரி கீழே தள்ளி கையால் தலையின் பின்புறம் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், எதிரி, சாட்சி1, சாட்சி 2ஐ தூக்கி விளக்கிய போது சாட்சி 1–ஐ கல்லால் இடது பக்க அல்லையின் அடித்தும், தடியால் முதுகின் மீது அடித்தும், கல்லால் தலை மற்றும் இடது பக்க நெற்றியில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாக எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 324 –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக பஞ்சப்பள்ளி, காவல் உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு – 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. இறுதி அறிக்கையையும், அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து, எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 294(b), 323, 324 –ன் கீழ் குற்றச்சாட்டுகள்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.06 18:35:49 +0530

வனைந்து, குற்றம் பற்றி எடுத்துரைத்து வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்யப்படவேண்டும் என்று கோரினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு–</u>

i) கடந்த 26.11.2022–ம் தேதி மாலை சுமார் 04.45 மணிக்கு கீழே விழுந்த நாகராஜ் மகன் மணி (எ) மணிகண்டனை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டி அருள்முருகன் (அ.சா.2) அவரது இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்ற போது ஆரண் அடித்ததால், எதிரி அ.சா.2 –ஐ பார்த்து ஏண்டா என்னை பார்த்து ஆரண் அடிக்கிற என சொல்லி கெட்ட வார்த்தையால் திட்டியும், அடிக்க வந்த போது முருகேசன்(அ.சா.1) விளக்கிய போது எதிரி அ.சா.1–ஐ கெட்ட வார்த்தையால் திட்டியும், கையாலும், தடியாலும், கல்லாலும் தாக்கி காயப்படுத்தியுள்ளார். மேற்படி தகராறில் அ.சா.1, அ.சா.2 –க்கு ஏற்பட்ட காயத்திற்காக வேண்டி பாலக்கோடு அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சையில் இருந்த போது பஞ்சப்பள்ளி காவல் உதவி ஆய்வாளர் சபி (not examined) விசாரித்து புகார் வாக்குமூலம் (அ.சா.ஆ.1) பதிவு செய்தும், அதனை நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண்.94/2022 இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324 –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை(அ.சா.ஆ.4) பதிவு செய்துள்ளார்.

ii) பின்னர் இவ்வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் எல்லப்பன் (not examined),


AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.06 18:35:54 +0530

ஏழுகுண்டன்(not examined) ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரிவரைபடம்(அ.சா.ஆ.5), பார்வை மகஜர்(அ.சா.ஆ.6), தயாரித்துள்ளார். மேலும் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கு சொத்துகளை கைப்பற்றுதல் மகஜர்( அ.சா.ஆ.7) வாயிலாக கைப்பற்றி, படிவம் 95( அ.சா.ஆ.8) வாயிலாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். மரக்கட்டை சா.பொ.1 ஆகவும், கல் சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தகராறு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி அர்ஜுனன்(அ.சா.3)–ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

iii) பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சிசிக்சை பெற்று வந்த முருகேசன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.பாலசுதா(அ.சா.4)–ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், முருகேசனின் காயச்சான்று (அ.சா.ஆ.2), அருள்முருகன் காயச்சான்று (அ.சா.ஆ.3) –ஐ பெற்றும். காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது. மேலும் இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக பஞ்சப்பள்ளி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜீவானந்தம் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

6. இவ்வழக்கில் எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவிய பொழுது, எதிரி அவற்றை பொய் சாட்சிகள் எனவும், பொய் வழக்கு என்றும் கூறினார். தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பில் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.06 18:35:59 +0530

7) அரசு தரப்பு வாதுரையில் இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுகள் உண்மை எனவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களும், சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

8) எதிரி தரப்பு வாதுரையில், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை எனவும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் உள்ள முன்விரோதத்தை நிறைவேற்றவே எதிரியின் மீது பொய் புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆழ்ந்து பரிசீலனை செய்யப்பட்டது.

10. **இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 294(b), 323, 324 –ன் கீழான குற்றங்களை அரசு தரப்பினால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.**

**<u>தீர்வு</u>**

i) முருகேசன் (அ.சா.1) தனது சாட்சியத்தில் எதிரிக்கும், தனக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக முன் விரோதம் இருந்தது வந்தது எனவும், தனது வீட்டருகே மணி என்பவர் விழுந்து கூட்டம் கூடி இருந்தது எனவும, அவரை அருள்முருகன் (அ.சா.2) அவரது இருசக்கர வாகனத்தில் அழைத்து செல்லும் பொது ஆரண் அடித்ததை தனக்கு ஆரண் அடித்ததாக எதிரி கோபம்


AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.06 18:36:03 +0530

கொண்டு அ.சா.2 –ஐ கொம்மா, கோத்தா என கெட்டவார்த்தைகளால் திட்டி கையால் அ.சா.2–ஐ தலையில் அடித்தும், கல்லால் தலை மற்றும் இடுப்பு பகுதியில் அடித்தார் எனவும் இதை தடுக்க சென்ற தன்னை கட்டையால் உடம்பிலும், தலையிலும் அடித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அருள்முருகன் (அ.சா.2) தனது சாட்சியத்தில் 26.11.2022 ஆம் தேதி தனது மாமா மணி என்பவர் விழுந்து கிடப்பதாக கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்றதாகவும், அங்கு கூட்டம் கூடி இருந்தது எனவும், அவரை தனது இருசக்கர வாகனத்தில் அழைத்து செல்லும் பொது ஆரண் அடித்ததை தனக்கு ஆரண் அடித்ததாக எதிரி நினைத்துக்கொண்டு, தன்னையும் தனது தந்தையும் கெட்டவார்த்தையால் கொத்தா, கொம்மா, தேவிடியா பையா என கெட்டவார்த்தைகளால் திட்டினார் எனவும், தன்னை இருசக்கரவாகனத்தில் இருந்து கீழே இழுத்து தள்ளி அடித்தார் எனவும், தனது தந்தை அ.சா.1–ஐ கல் மற்றும் தடியால் முகத்தில் மற்றும் முதுகில் அடித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

iii) அர்ஜுனன் (அ.சா.3) தனது சாட்சியத்தில் சம்பவ இடத்தில் கூட்டமாகஇருந்தது எனவும், தான் அங்கு சென்று பார்த்ததாகவும், என்ன பிரச்னை என தனக்கு தெரியாது எனவும் சாட்சியம் அளித்துள்ளார் அரசு தரப்பு வழக்கிற்கு பிரண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

iv) முருகேசன் (அ.சா.1) மற்றும் அருள்முருகன் (அ.சா.2) ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. பாலசுதா இவ்வழக்கில் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.4 தனது சாட்சியத்தில் சிகிச்சைக்கு வந்த அ.சா.1 தன்னை மூன்று ஆண்கள் மரக்கட்டையாலும் கல்லாலும் அடித்தார்கள் என கூறியதாகவும் அவரை பரிசோதித்ததில், இடது மணிக்கட்டில் சிராய்ப்பு காயம்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.06 18:36:08 +0530

ஏற்பட்டதாகவும், இடது மார்பில் இரத்த கன்றல் காணப்பட்டதாகவும், அ.சா.1 தன்னிச்சையாக சிகிச்சையில் இருந்து வெளியேறியதால் அ.சா.1 ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க இயலாது என சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சிகிச்சைக்கு வந்த அ.சா.2 தன்னை 8 பெண்கள் மற்றும் 2 ஆண்கள் மரக்கட்டையாலும் கல்லாலும் அடித்தார்கள் என கூறியதாகவும், அவரை பரிசோதித்ததில் பின் மண்டையில் இரத்த கன்றல் காணப்பட்டதாகவும், வலது காது கேட்கவில்லை என கூறினார். மேல்சிகிச்சைக்கு அனுப்பப்பட்டு மருத்துவமனைக்கு செல்லாததால் ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க இயலாது என சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

v) முருகேசன் (அ.சா.1) மற்றும் அருள்முருகன்(அ.சா.2) தங்களது குறுக்கு விசாரணையில் எதிரி கொடுத்த புகாரின் பேரில் அ.சா.1 பெயரில் வழக்கு உள்ளது எனவும் சம்பவத்தின் போது கூட்டமாக இருந்ததால் யார் அடித்தார்கள் என தெரியாது எனவும், சந்தேகத்தின் பேரில் எதிரி மீது புகார் கொடுத்ததாகவும், எதிரி கொடுத்த புகாரில் இருந்து தப்பிக்கவே வழக்கு புகாரை கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் வழக்கு சான்று பொருட்கள் மரக்கட்டை மற்றும் கல் சம்பவ இடத்தில் தக்க பயன்படுத்தியது போலத்தான் உள்ளது என சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் தங்களது சாட்சியங்களுக்கு வேறுபாடு சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் எதிரிக்கும் அ.சா.1-க்கும் இடையே பணம் சம்பந்தமாக முன்விரோதம் உள்ளதாக அ.சா.1 சாட்சியத்தின் படி தெரிய வரும் நிலையில் வழக்கு சம்பவத்தை தனி நபர் சாட்சிகள் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை.

vi) எனவே எதிரி கெட்ட வார்த்தையால் திட்டி அ.சா.1 மற்றும் அ.சா.2-க்கு காயம் ஏற்படுத்தியதாக சாட்சிகள் அடிப்படையில் நிரூபிக்கப்படாத

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.06 18:36:14 +0530

காரணத்தினால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியின் மீது சுமத்தியுள்ள குற்றத்தை எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யத் தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் அரசு தரப்புக்கு எதிராக முடிவு செய்கிறது.

9. எனவே, **முடிவாக,** எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 324 –ன் கீழான குற்றச்சாட்டுக்கள், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டார்கள் என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிக்காக எழுதி கொடுக்கப்பட்ட பிணையபத்திரங்கள் இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்தான CP.No.17/2023–ல் கண்ட சா.பொ.1 மரக்கட்டை –1 மற்றும் சா.பொ.2– கல் ஆகியவைகளை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06 –ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.06 18:36:21 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்

பாலக்கோடு.

**அனுபந்தம்**

**<u>1. அரசு தரப்பு சாட்சிகள்</u>**

அ.சா.1 – திரு. முருகேசன்

அ.சா.2 – திரு.அருள்முருகன்

அ.சா.3 – திரு.அர்ஜுனன்

அ.சா.4 – திருமதி. பாலசுதா (மருத்துவர்)

அ.சா.5 – திரு.ஜீவானந்தம் (சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்)

**<u>2.அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ – 1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ – 2 | காயச்சான்று (முருகேசன்) |
| அ.சா.ஆ – 3 | காயச்சான்று (அருள்முருகன்) |
| அ.சா.ஆ – 4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ – 5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ – 6 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ – 7 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ – 8 | படிவம் 95 |

3. **அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்** – இல்லை

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.06 18:36:27 +0530

4. **எதிரி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள்,**

**சான்றாவணங்கள், சான்றுபொருட்கள் – இல்லை**

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.06 18:36:32 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்

பாலக்கோடு.

குறிப்பு–

1. இத்தீர்ப்பின் நகல் அரசு தரப்பினருக்கு இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் சென்றுள்ளார்.
4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் குறித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.